மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட இருக்கின்றன. அதாவது 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட இருக்கின்றன. அவ்வாறு புதிதாக அமைக்கப்படும்போது, அங்கு தேவைக்கு மேலாகவே மின்திறன் வசதி செய்யப்படவிருக்கிறது. எனவே, அதனை 110/11 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றினால்தான் தேவை நிறைவு செய்யப்படும் என்று தவறாகப் புரிந்துகொண்டதன் விளைவாக இத்தகைய கேள்விகள் அடிக்கடி இம்மாமன்றத்தில் எழுப்பப்படுகின்றன என்பதற்காகத்தான் இதை இவ்வளவு விரிவாகச் சொல்கிறேன்.

உங்கள் பகுதி மின்சார வாரிய அதிகாரியிடத்தில் கேளுங்கள். உங்கள் பகுதியில் எவ்வளவு மின் பளு இருக்கிறது? அங்கு இருக்கக்கூடிய மின்மாற்றியின் திறன் எவ்வளவு? அந்தத் திறன் எவ்வளவு என்று தெரிந்துகொண்டாலே உங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும். அவ்வாறு திறன் பற்றாக்குறையென்றால், துணை மின் நிலையத்தையே மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அங்கு கூடுதலாக ஒரு power transformer *அமைத்தால் போதுமானதாகும். இவையனைத்தையும் உங்கள் தேவை நிறைவடைய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கின்றேனே தவிர, வேறொன்றுமில்லை. உங்கள் பகுதியின் மின் தேவை, கூடுதல் மின்மாற்றிகள் நிறுவப்படுவதன்மூலம் நிறைவடைவதால், அங்கு புதியதாக 110/11 கே.வி. துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

தொழிற்பயிற்சி நிலையம்

***51827—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 ஆகஸ்ட் 27]

(அ) சிதம்பரத்தில் பெண்களுக்குத் தனியாக தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், ஏற்கெனவே 'சகஜானந்தா தொழிற்பயிற்சி நிலையம்' என்ற தொழிற்பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டிலேயே ஆதி திராவிட மக்களுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரே ஒரு தொழிற்பயிற்சி நிலையமாகும்.*

முற்பகல் 10-35

வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சித் துறைமூலம் இந்தப் பயிற்சி நிலையம் பராமரிக்கப்பட்டாலும், இதற்கான நிதி, மற்ற ஏற்பாடுகளை ஆதி திராவிடர் நலத் துறைதான் வழங்கி வருகிறது. சிறப்பாகச் செயல்படுகிற இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் எவ்வளவு இடங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவு இடங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றனவோ. தமிழ்நாட்டில் உள்ள மற்ற தொழிற்பயிற்சி நிலையங்களில் எல்லாம் தீர்மானிக்கப்பட்ட இடங்கள் அளவிற்கு மாணவர் சேர்க்கை இல்லாமல் காலியிடங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திலே முழுக்க, முழுக்க மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். 211 பேர் படிக்கக்கூடிய அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில், பெண்கள் 44 பேர் மட்டும்தான் இருக்கிறார்கள்.

கடலூரிலே இருக்கிற பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் 300 பேர் படிக்கிறார்கள். ஆனால், அதிலே 60 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட பெண்கள் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவில் பகுதிகளிலிருந்து வந்து படிக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம்

சேர்த்து பார்க்கிறபோது, சிதம்பரத்திலேயே பெண்களுக்கென்று ஒரு தனி தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கிறபோது, இதர சமூகத்திலே இருக்கிற பெண்கள் சேர்ந்து அதிகமாகக் கல்வி பெற்று, அதிகமான வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இப்போது சிதம்பரத்திலே படித்த பெண்களுக்கு, கடந்த ஆண்டு வரை தேர்ச்சி பெற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்துவிட்டது. எனவே, சிதம்பரத்திலே பெண்களுக்கான ஒரு தனி தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் ஆகிய மூன்று இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடலூரில் மகளிருக்காக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் 35 பெண்கள் சேருவதற்கான இடம் இப்பொழுதும் காலியாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 5,229 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இதிலே 833 இடங்கள் காலியாக உள்ளன. அனைத்துத் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மகளிருக்கென்று 30 சதவிகித இருக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மூலமாகத் தரப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மகளிருக்காக மட்டும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே அங்கே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் இருக்கிறது. அதிலேயும் சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிறப்புப் பாடத் திட்டம் வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தந்தது

என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலும், பொதுப் பிரிவினருக்கு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலேயும் 30 சதவிகிதம் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். எனவே, எதிர்காலத்தில் தேவை இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே அங்கே பெண்களுக்கென்று தனி தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், சாதாரண ஏழையெளிய மக்கள் பொறியியல் கல்லூரிக்கோ, மற்ற கல்லூரிகளுக்கோ செல்வதைவிட, தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் படித்து, விரைவிலே வேலைவாய்ப்பு பெறுகிற வாய்ப்பிருக்கிற காரணத்தினால், அதை விரைவாகப் பரிசீலித்து, அங்கே தொழிற்பயிற்சி நிலையத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.*

அரசு தொழிற்பயிற்சி நிலையம் இல்லாத நேரத்திலேதான் அதிகமான மாணவர்கள் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை நோக்கிப் போகிறார்கள். எனவே, அரசு தொழிற்பயிற்சி நிலையம் வருகிறபொழுது, இடங்கள் காலியில்லாமல் மாணவர்கள் சேருவதற்கு நிச்சயமாக வாய்ப்பிருக்கிறது. தற்பொழுதுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் பெண்கள் அதிகமாக வாய்ப்பு பெறுகிற வகையில், Cutting and tailoring, computers, stenography *போன்ற 3* trades-*ஐ கடந்த ஆண்டு நான் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு* trade-*ஐ ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 3* trades-*லும் பெண்கள் அதிகமாகப் படிப்பதற்கு விரும்புகிற சூழ்நிலையில், இந்த 3* trade-*களை தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒதுக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, புதிய பிரிவுகளையெல்லாம் தொடங்கிட வேண்டுமென்கிற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான், நேற்றையதினம்கூட 12 புதிய பிரிவுகள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான், கடலூர் மாவட்டத்தில், கடலூரில்* Electrician, *சிதம்பரத்தில்* Wireman *போன்ற பாடப் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, காலத்திற்கேற்ப, காலத்தின் மாற்றத்திற்கேற்ப, மேலும், மேலும் புதிய பயிற்சிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

156—

குழந்தைகள் காப்பகம்

***44797—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் ஓர் அரசு குழந்தைகள் காப்பகமும், தன்னார்வத் தொண்டு